# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2008 / 2009
## HELD IN AUGUST - 2009

## SOC 3.15 – INTRODUCTION TO CRIMINOLOGY

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. குற்றம் என்றால் என்ன? ஒரு குற்றம் ஏற்படுவதற்கான சமூக, பொருளாதார அரசியல் பின்னணிகளை விளக்குக.

02. குற்றம் ஒன்று புரியப்பட்டுள்ளது என்பதனை குற்றமனம், குற்றச் செயல் என்ற இரண்டையும் அடிப்படையாக வைத்தே நீதிமன்றங்கள் தீர்மானிக்கின்றன. இது தொடர்பில் தீர்க்கப்பட்ட வழக்குகள், பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

03. (அ) பொதுச் சட்டத்தின் கீழ் விவாகரத்துப் பெறுவதற்குப் பொருத்தமான காரணங்கள் எவை?

(ஆ) விவாகரத்து சமுதாயத்தில் ஏற்படுத்தும் சாதக – பாதக தாக்கங்களை எடுத்துக்கூறி ஆராய்க.

04. ஊடகங்களின் செயற்பாடுகள் சமுதாயத்தில் விழிப்புணர்வைக் கொண்டுவருகின்றன என்று கூறப்பட்டாலும், அவை எதிர்மாறான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துரை தருக.

05. சந்தேக நபர்கள் பிணையில் விடப்பட வேண்டும் என்பது 1997ம் ஆண்டின் 30ம் இலக்க பிணைகள் சட்டத்தின் கட்டாயமான ஏற்பாடாகவுள்ள போதும், அதனை நடைமுறைப்படுத்துகின்ற நீதிமன்றங்கள் பல சந்தர்ப்பங்களில் அதற்கு மாறாகச் செயற்பட்டு பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றன. இக்கூற்றை பிணைச் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

06. ஒரு நாட்டின் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் சர்வதேச அபிப்பிராயங்கள் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. மரண தண்டனையின் நிறைவேற்றம் தொடர்பில் மேற்குறித்த கூற்றினை ஆராய்க.

07. "குற்றவாளிகள் (Criminals) சமுதாயத்தில் ஒரு தனியான அங்கம்" அவர்கள் அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டே பார்க்கப்பட வேண்டுமா? ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பெழுதுக.

(அ) குடியியல் தவறும் - குற்றவியல் தவறும்

(ஆ) 2005ம் ஆண்டின் 34ம் இலக்க இல்லத்து வன்முறைகள் தடுப்புச் சட்டம் (No. 34 of 2005 Prevention of Domestic Violence Act)

(இ) பெண்களும் குற்றமும்

(ஈ) மரண தண்டனை (Death Penalty)

***